EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 18

# நெய்தல் நில மக்களின் வாழ்வியல் போராட்டங்கள்

**ஜெ. சவிதா**
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
, உதவிப் பேராசிரியர்,
ஜி.டி.என்.கலைக் கல்லூரி, திண்டுக்கல் - 5,
தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல் முகவரி : Savithagtn@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

சு.தமிழிச்செல்வியின் மாணிக்கம், ஆறுகாட்டுத்துறை ஆகிய புதினங்களில் மீன்பிடித் தொழில் பற்றியும் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும்; மீனவர்கள் பற்றியும் மிக விரிவானதொரு பதிவுகளைக் காண முடிகின்றது. கடல் கடந்து சென்று மீன்பிடித்து வரும் ஆண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் போன்றே பெண்களும் அதனை விற்பனை செய்வதில் பல சிக்கல்களைச் சந்திக்கின்றனர். மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் ஆண்கள் எடுத்து வரும் வருமானத்தை வைத்துக் கொண்டு அதற்கேற்றவாறு குடும்பம் மேற்கொள்வதும், மீன்பிடித் தொழில் இல்லாத காலங்களில் குடும்பம் மேற்கொள்தில் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் மாணிக்கம், ஆறுகாட்டுத்துறை நாவல்களில் பல இடங்களில் சுட்டிக் காட்டுகிறார். மாணிக்கம் நாவலில் மாணிக்கம் தன் மகனை மீன்பிடித் தொழிலில் இருந்து மாற்றுத் தொழிலுக்கு மாற்ற நினைக்கிறார். ஆறுகாட்டுத்துறை நாவலில் சிங்காரவேலு நாட்டார், விசைப்படகு வாங்கிவிட்டு ஆறுகாட்டுத்துறை

மக்களுக்கு மீன்பிடித் தொழிலில் புதிய நுட்பங்களைக் கற்றுத் தருகிறார். எனவே, மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் மீனவர்கள் மரபினால் போதுமான பொருளாதாரத்தை ஈட்ட முடியாமலும், பொருளாதார வசதி இன்மையால், புதுமையான தொழில் கருவிகளை எட்ட முடியாமல்; தடுமாற்றம் கொண்டு வாழும் நிலையை ஆசிரியர் உணர்த்துகிறார்.

## கலைச்சொற்கள்

கச்சா, பறிக்கூடு, கோயாக்கட்டைகள், முழுக்காளி, நாட்டார்.

## முன்னுரை

கடலும் கடல் சார்ந்த பகுதியுமான நெய்தல்நிலத்தில் மீன் பிடித்தல், உப்புக் காய்ச்சுதல், முத்துக் குளித்தல் என்னும் மூன்று தொழில்கள் முதன்மைத் தொழில்களாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதைப் பழந்தமிழ் இலக்கியமான சங்க இலக்கியம் வழி அறிய முடிகின்றது. இத்தகைய மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல் ஆகியவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு படைப்புகள் பல தமிழில் வெளிவந்துள்ளன. அவ்வரிசையில் சு.தமிழ்ச்செல்வி, அளம் புதினத்தில் உப்பளத் தொழில் பற்றியும், அத்தொழிலை மேற்கொள்ளும் உழைப்பாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் எடுத்துக் காட்டியுள்ளார். மாணிக்கம், ஆறுகாட்டுத்துறை ஆகிய புதினங்களில் மீன்பிடித் தொழில் பற்றியும் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும்; மீனவர்கள் பற்றியும் மிக விரிவானதொரு பதிவுகளைக் காண முடிகின்றது. கடல் கடந்து சென்று மீன்பிடித்து வரும் ஆண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் போன்றே பெண்களும் அதனை விற்பனை செய்வதில் பல சிக்கல்களைச் சந்திக்கின்றனர். மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் ஆண்கள் எடுத்து வரும் வருமானத்தை வைத்துக் கொண்டு அதற்கேற்றவாறு குடும்பம் மேற்கொள்வதும், மீன்பிடித் தொழில் இல்லாத காலங்களில் குடும்பம் மேற்கொள்தில் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் மாணிக்கம், ஆறுகாட்டுத்துறை நாவல்கள் பல இடங்களில் சுட்டிக் காட்டுகிறது. கண்ணகி நாவலில் மீன்பிடித் தொழில் பற்றிய செய்திகள் இடம்பெறாமல் அதனை விற்பனை செய்வதில் உள்ள நுணுக்கங்களைப் பதிவு செய்யதைக் காண முடிகின்றது. எனவே, நெய்தல்நிலத் தொழிலான மீன்பிடித்தல், மீன் விற்பனை செய்தல் ஆகியவற்றில் அத்தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை வெளிப்படுத்தும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

## நெய்தல்நிலம்

கடலும் கடல்சார்ந்த நிலவமைப்பு நெய்தல் நிலம் என்பதும், அதற்குரிய தெய்வம் வருணன் என்பதும் நாம் அறிந்ததே.

நெய்தல் நில அமைப்பை ஆறுகாட்டுத்துறை நாவல் சுட்டிக்காட்டுவதை, ‘ஆறுகாட்டுத்தறை கடற்கரை மட்டும் மற்ற கடற்கரையைப் போலல்லாமல் கடலுக்குள் சற்று உள்சென்று இருக்கும். நெய்தல் நிலமகள் பாதி தலையை மட்டும் கடலுக்குள் வைத்து கிழக்கு மேற்காய் மல்லாந்து படுத்திருப்பதைப் போல இருக்கும். அவளுடைய அழகிய முகமாய் கடற்கரை, உடம்பாய் ஊர், கால் பகுதியெங்கும் கானலாற்று சதுப்புநிலம். ஆவள் பாதங்களைக் கழுவிச் செல்வது போல கானலாறு”1 என்பதன்வழி ஆறுகாட்டுத்துறையின் அமைவிடத்தையும் நெய்தல் நிலப் பின்னணியோடு உள்ள ஊர் ஆறுகாட்டுத்துறை என்பதையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

கடலும் கடல் சார்ந்த பகுதியுமான நிலமே நெய்தல் நிலமாகும். இந்நெய்தல் நிலத்தில் மீன்பிடித் தொழில் முதன்மையான தொழிலாகக் காணப்படுகின்றது. மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்கள் பரதவர்கள் என்று சங்க காலத்தில் குறிக்கப்பட்டனர் ‘நெய்தல் மக்கள் பரதவர் நுளையர் எனப்பட்டனர். மேலும் சேர்பன், துறையவன், கொண்கன் என்னும் சொற்களும் இவர்களைக் குறிக்கின்றன.”2 என்று கடல் சார்ந்த மக்கள் குறிக்கப்படுவதை எடுத்துக்காட்டுகிறார் அ.கா.பெருமாள்.

## ஆற்றுமீன் பிடித்தல்

‘நெய்தல் நிலத்தில் மீன் பிடித்தலும் உப்பு விளைவித்தலும் முக்கியம் பெற்றிருந்தன. நெய்தல் நிலத்தில் மட்டுமின்றி மருத நிலத்திலுள்ள களனிகளிலும் மடுக்களிலும் பொய்கைகளிலும் மீன்பிடித்தல் இடம்பெற்றன”3 என்று கடலிலும் வயல்களிலும் மீன்பிடித்தல் நடைபெற்றமையை எடுத்துக்காட்டுகின்றார் க.அருணாச்சலம்.

புருட்டியர் என்பவர் வயல்களிலும், ஆறுகளிலும் மீன் பிடித்து விற்பனை செய்து வந்தார் என்பதை மாணிக்கம் நாவலின்வழி அறிய முடிகின்றது. ‘வெள்ளி முளைக்கும் முன்பாகவே எழுந்து விடுவார் புருட்டியர். தன்னுடைய கச்சாவையும் பறிக்கூட்டையும் எடுத்து தோளில் மாட்டிக் கொண்டு அவர் உயரத்திற்கு கையில் ஒரு தடியை எடுத்துக் கொண்டு ஆற்றுக்குப் போய்விடுவார். மழை, பனி எதையும் பார்க்கமாட்டார்”4 என்பதன்வழி ஆற்றில் மீன் பிடிப்பது என்றாலும் உhயி காலத்திற்குச் சென்றால் மட்டுமே முடியும் எனக் கருதி நள்ளிரவு நேரத்தில் புருட்டியர் சென்று மீன்பிடிப்பதை அறிய முடிகின்றது.

புருட்டியர், கெண்டை, கெழுத்தி, சன்னப்பொடி என்னும் மீனினங்களைப் பிடித்து விற்பனை செய்வார். வாய்க்கால்களில் அவர் மீன் பிடிக்கும் முறையைக் "கீக்குமுளியாறு நடுவாய்க்கால், தொம்பவாய்க்கால், கன்னிவாய்க்கால், கண்டகல்லு வாய்க்காலென்று ஏதாவது ஒரு வாய்க்காலில் கச்சா வைத்து மீன் பிடிப்பார். கச்சாவுக்குள் நத்தைகளை உடைத்து போட்டு மீன் புழக்கம் அதிகமுள்ள பகுதியில் வைத்து விடுவார். பறிக்கூடு நிறையும் வரை வாய்க்காலை விட்டு கரையேற மாட்;டார். பிடிக்கும் மீன்களை ஐந்து காசு, பத்து காசென்று எவ்வளவுக்குக் கேட்டாலும் கொடுப்பார்'[5] என்று ஆற்றில் மீன் பிடிக்கும் முறை குறிப்பிடப்படுகிறது மாணிக்கம் நாவல்.

## கடல் மீன்பிடித்தல்

கடலில் சென்று மீன்பிடிக்கும் தொழிலில் மாணிக்கமும் அவனது மகன் நாஞ்சியும் ஈடுபடுகின்றனர். கடலின் ஒவ்வொரு பகுதி பற்றிய நுண்ணறிவை அவர்கள் கொண்டிருப்பதை மாணிக்கம் புதினத்தின்வழி அறிய முடிகின்றது.

மாணிக்கம் நாவலில் இடம்பெறும் மீன்பிடித் தொழிலானது, 'கவணைக்கரைக்கு கிழக்கிலுள்ள கடலோரத்து ஆழமான பரந்து விரிந்த நீர்ப்பகுதி கிழக்கு ஒடவு. மேற்கிலுள்ளது மேல ஒடவு. நேரே தெற்கில் கடற்கரை வரையுள்ளது தெற்கு ஒடவு. இந்த ஒடவுக்குள் அங்கங்கே நிலத்திட்டுகளும் தீவுகளும் இருக்கிறது. சந்திரமதி, மூணுமாவுத் தீவு, வாடியக்காட்டுத் தீவு, ஐயனார் தீவு, கிடாமாட்டுத் தீவு, பழயாத்துத் தீவு'[6] ஆகிய பகுதிகளிலே நடைபெற்றதை நாவலின்வழி அறிய முடிகின்றது.

மாணிக்கதின் மகன் நாஞ்சி வயதில் சிறியவனாக இருந்தாலும் மீன்பிடித் தொழிலின் பல்வேறு நுணுக்கங்களை அறிந்து வைத்திருப்பவன். அதனால்தான் எந்தக் காலத்தில் எந்த இடத்தில் வலை விரித்தால் மீன் பாடு நன்றாக இருக்கும் என்பதை அறிந்து வைத்திருந்தான். மாணிக்கம் நாஞ்சியிடம்,

'யாண்டா தம்பி இப்படியேப் போயி கீழ ஒடவுல வலயப் போட்டு பாத்தான்னடா"

' வேண்டாம்ப்பா ஒரே ஒலயாருக்கும். சைக்கிள் போவாது. அவ்வளதூரம் நம்மளாலயும் நடந்து போவ முடியா. போனாலும் வலயில நண்டு நெறயா வுழும். இப்ப சீரு பண்ணுன வல. இந்த வருச கருப்பறாலு சீசன் வரக்கிம் இதத்தான் பத்தரமா வச்சிருக்கணும்"[7] என்று நாஞ்சி கூறுகிறான்.

வலைபோட்டு மீன் பிடிப்பதைச் 'சுருக்கைப் பிரித்து நுனிக்கயிற்றில் தண்ணீரில் மிதப்பதற்காகக் கட்டப்படும் கோயாக்கட்டையைக் கட்டினார். கோயாக்கட்டை பெரிய ப்ளாஸ்டிக் பந்து போல் இருந்தது. அதில் கயிற்றைக் கோர்த்துக் கட்ட வசதியாய் ஓரிடத்தில் வளையம் போலிருந்தது.

கோயாக்கட்டையைத் தண்ணீரில் மிதக்க விட்டார். வலையை ஒவ்வொரு அள்ளாக எடுத்து தண்ணீரில் விட்டுக் கொண்டே போனார். ஒரு வலை முடிந்து அதனுடன் அடுத்த வலையைச் சேர்க்குமிடத்தில் கோயாக்கட்டையைக் கட்டினார். ஒரு கிலோ மீட்டர் தூரம் வரை அவருடைய வலைகள் கோடாய்க் கிடந்தன. வரிசையாய் கோயாக்கட்டைகள் மிதந்தன. அவை அலையில் மேலும் கீழும் ஏறியிறங்கிக் கொண்டிருந்தன. ஓர் அடிக்கு ஒன்றாக வலை நெடுகிலும் கட்டப்பட்டிருந்த மிதப்புக் கட்டைகள் வட்டமான மேரி ரொட்டிகளைப் போல கடல் நீரில் மிதந்து கொண்டிருந்தன"[8] என்று மீன்பிடித் தொழிலை நம் கண்முன் காட்சிப்படுத்துகிறது மாணிக்கம் புதினம். நாஞ்சி மீன்பிடிக்கத் தெரிவு செய்த சந்திரமதி தீவானது கடல் பகுதியில் ஆழம் குறைவாக உள்ள இடமாக இருந்தது. மழைவிடாது பெய்து கொண்டிருந்ததாலும், நிலவொளி அதிகமாக இருந்ததாலும் சந்திரமதித் தீவில் மீன்பிடிக்கலாம் என நாஞ்சி முடிவு செய்தான். அவன் நினைத்ததைப் போன்றே சந்திரமதித் தீவில் இறால்மீனின் பாடு நன்றாக இருந்தது.

'பாடு எப்படி இருந்திச்சி நாஞ்சி"

'நல்லாருக்கு மாமா வெள்ளத்துக்கு அதுபாட்டுக்கு பெரண்டு வருது.

'வெள்ளறாலுதான் எல்லாம்'[9] என்பதன்மூலம் வெள்ளை இறால் பிடிப்பதற்கான காலத்தை அறிந்து செயல்பட்டான் நாஞ்சி என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

வலையில் பிடித்த இறால்மீனின் தலைப்பகுதியில் உள்ள அதன் ஓட்டை உடைக்க ஆரம்பித்தனர். 'இறாலின் தலைப்பகுதி ஓடு அதற்குக் கவசம் போன்றிருந்தது. வாயின் முன்புறம் நீண்டதாய் முள் இருந்தது. அடிப்பக்கமாய் விரலை அழுத்திப் பிடித்து தலையிலிருக்கும் சதை ஓட்டோடு போய் விடாதபடி ஓட்டை மட்டும் பிய்த்தெடுத்தார்கள். இறால் உடைப்பதொன்றும் அவ்வளவு சுலபமான வேலையில்லை. வெங்கிடுசாமியும் நாஞ்சியும் மடமடவென உடைத்துப் போட்டார்கள். அவர்களுக்கு இறால் உடைப்பது நன்றாகப் பழக்கப்பட்டிருந்தது. இருந்தும்கூட நாஞ்சியின் விரல் நகக்கண்ணிலிருந்து இறாலின் முள் குத்தி இரத்தம் கசிந்து கொண்டிருந்து"[10] என்பதன் மூலம் இறால்மீன் பிடிப்பதும் அதனை விற்பனை செய்வதற்குரிய பொருளாக மாற்றுவதும் கடினமான செயலாக உள்ளதைக் காண முடிகின்றது.

## இயந்திரப் படகு மூலம் மீன்பிடித்தல்

முதன்முதலில் இப்போதுதான் ஆறுகாட்டுத்துறைக்கு விசைப்படகுகள் வந்திருக்கின்றன. கோடியக்கரைக்கு கடந்த வருடமே வந்துவிட்டது. நாகப்பட்டிணம், ஈச்சாங்குப்பத்திலெல்லாம் நான்கு வருடங்களுக்கும் மேலாக

விசைப்படகில் சென்று மீன்பிடித்து வருகிறார்கள். சிங்காரவேலு நாட்டாரின் இரண்டு வருடத்து கனவு இது. அன்றுதான் நிறைவேறி இருக்கிறது. விசைப்படகிற்கு கடனுதவி கிடைக்கிறது என்றுதான் பெயர். ஆனால், படகிற்கான விலையில் பாதியைக் கட்டச் சொல்கிறார்கள் முன்பணமாய். பாதிப்பணத்தைக் கட்டியும் கால்தேய ஆறுமாதமாக அலைந்து இன்றுதான் விசைப்படகு துறைக்கு வந்து சேர்ந்திருக்கிறது."[11]

இயந்திரப் படகில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் நல்ல உடல் ஆரோக்கியத்துடனும், சுறுசுறுப்பாகவும் இருக்க வேண்டும். சிறியது, பெரியது என எத்தகைய மீன்கள் விழுந்தாலும் அதனைப் பிடித்திழுக்கும் ஆற்றல் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

'படகுல போறவுங்க சுறுசுறுப்பா இருக்கணும். சன்னப் பொடியிலேயிருந்து எவ்வளவு பெரிய மீனு பட்டாலும் அசராம புடிச்சி நல்ல பாடுபாக்குறவளா இருக்கணும். அப்புடி இருந்தாத்தான் கடன கட்டிட்டு போட்ட மொதல எடுக்க முடியும். அதுனால நல்ல வாலிபப் பயலுகளா பாத்துப் பொறுக்கணும். வெறும் விடலப் பயலுகளயே மட்டும் விட்டாலும் கடந்தான். கடலோட நெளிவு, சுளிவு தெரியாம ஆபத்துல மாட்டிக்கிட வேண்டியிருக்கும். அதுனால ஒவ்வொரு படகுலயும் கிட்டத்தட்ட முப்பது வருசத்துக்கு மேல கடலேறுன ஆளுகளாப் பாத்து ஒரு ஆள அனுப்பணும் புரிஞ்சதா"[12] என்று மீன்பிடித் தொழிலின் நுணுக்கத்தினை நாட்டார் கூறுகிறார். மேலும் விசைப்படகின் உரிமையாளர் கட்டாயமாக படகில் செல்ல வேண்டும் என்பதால் படகின் போக்கை அறிந்து கொண்டால்தான் பின்னாளில் தானாகச் சென்று மீன்பிடிக்க இயலும் என்பதை மனதில் நிறுத்தி இதுபோன்ற நிபந்தனைகளை நாட்டார் விசைப்படகுக்காரர்களுக்கு விதித்ததைக் காண முடிகின்றது.

விசைப்படகில் மீன்பிடிக்கும் நுணுக்கத்தை விரைவாகக் கற்றுக் கொண்டவன் சாமுவேல். அவனது பாடு பார்த்தல் குறித்து 'படகை கரைநோக்கி வேகமாக செலுத்திக் கொண்டிருந்தான் சாமுவேல். நாட்டாரின் படகில் செல்லும் ஐந்து பேரில் படகை ஓட்ட எளிதாகக் கற்றுக் கொண்டவன் சாமுவேல்தான். தொடர்ந்து அவனே படகை இயக்கியும் வருகிறான். இன்று நல்ல பாடு. படகுக்குள்ளிருந்த ஐஸ் பெட்டிகளில் வைத்தது போகவும் மிச்சம் நிறைய கிடைத்திருக்கிறது. கத்தாளையும், கொடுவாயும் பெரிது பெரிதாயக் கிடந்தன. இருபது மீன்களுக்கு மேல் ஐஸ் பெட்டிகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதற்குப் பிறகு வைக்க இடமில்லாமல் படகின் அடியில் கொஞ்சம் தண்ணீரை விட்டு மறுபடி கிடைத்த மீன்களை போட்டு வைத்திருந்தார்கள்"[13] என்று விசைப்படகின் மூலம் மீன்பிடித்தல் எளிதாகவும் மிகுதியான அளவில் பாடுபார்த்தலும் நடைபெற்றதைக் காண முடிகின்றது. விசைப்படகை செலுத்துவதில் அதிக உடல் உழைப்பும் இல்லை. அதேபோன்று விரைவாகச்

செல்லும் திறன் பெற்றது. அதிக எடையைச் சுமக்கும் திறன் பெற்றது. எனவே மரக்கலத்தில் மீன்பிடிப்பதை விட விசைப்படகில் மீன்பிடிப்பது விரைவாகவும் அதிக இலாபம் தரக்கூடியதாகவும் இருப்பதை எடுத்துரைக்கிறது.

## கடலோடு கொண்ட உறவுநிலை

ஆறுகாட்டுத்துறை மக்கள் கடலை வேறாகப் பார்ப்பதில்லை. கடலைத் தாயாகக் கருதுகின்றனர். அதுவும் அவ்வூர் நாட்டார் கடலைத் தெய்வமாகப் போற்றும் பண்புடையவராக இருக்கிறார்.

'நான் ஒரு முழுக்காளி. ஒருநாளு மேரி என்னக்கிம் இருக்குமுன்னு சொல்ல முடியாது. எனக்கு ஏதாவது ஆயிட்டா நீதாண்டா தம்பி, குடும்பத்தக் காக்கணும். மறுபடியும் நம்ப ஊரு ஒறவுன்னு சொல்லிக்கிட்டுப் போயி யாரயும் நத்தி நிக்ககொடாது நீங்க. இந்தக் கடல் இருக்குற வரைக்கிம் நீங்களும் இஞ்சதான் இருக்கணும். நும்பளுக்கு சொந்தஞ் சோலி அங்காளி பங்காளி எல்லாம் இந்தக் கடலுதான்னு சொல்லுவாரு"14 என்பதன்வழி சவரிமுத்து இறந்த துயரத்தைத் தாங்கவியலாது துடித்துக் கொண்டிருந்த சாமுவேல், தனது தந்தை கூறியதை நினைத்துப் பார்க்கிறான். அதாவது, சவரிமுத்து திருச்செந்தூரிலிருந்து ஆரோக்கிமேரியைத் திருமணம் செய்துகொண்டு ஊரைவிட்டு வேளாங்கண்ணிக்கு ஓடிவந்துவிட்டான். அப்போது சிங்காரவேலு நாட்டாரின் அறிமுகத்தோடு ஆறுகாட்டுத்துறைக்கு வந்தவன்தான் சவரிமுத்து. அன்றுமுதல் இன்றுவரை அந்த ஊரில் ஒருவராக இருந்து வாழ்ந்து வந்தான். தான் இல்லாத காலங்களில்கூட இந்த ஊரைவிட்டுச் செல்லக்கூடாது தன் பிள்ளைகள் என்பதை உணர்ந்திருந்தார் சவரிமுத்து. அதனால்தான் இந்தக் கடல்தாய் தான் நமக்குச் சொந்த பந்தம் எல்லாம். எந்தச் சூழ்நிலையிலும் கடல்தாயைப் பழித்துவிடாதே. இந்த ஊரைவிட்டு வேறு ஊருக்குச் சென்றுவிடாதே என்று கூறியதை நினைவுறுத்துகிறான் சாமுவேல் என்பதன்வழி ஆறுகாட்டுத்துறை கடல் அவர்களுக்குரிய வாழ்வாதாரத்தைத் தொடர்ந்து தந்து கொண்டிருப்பதால் வாழ்க்கையை நம்பிக்கையோடு மேற்கொள்ள முடிகிறது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

ஆறுகாட்டுத்துறை மக்கள் கடல்தாயை எவ்வாறு முழுவதுமாக நம்புகின்றனரோ, அதனைப் போன்றே நாட்டாரும் நம்பிக்கை கொண்டிருந்தார். நாட்டாருக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்து நான்கைந்து ஆண்டுகளாகியும் அடுத்த குழந்தை பிறக்கவில்லை. ஊரில் உள்ளவர்கள் அனைவரும் நாட்டாருக்கு ஒரே வாரிசுதான் எனப் பேசினர். இதனையறிந்த நாட்டாருக்கும் அவரது மனைவிக்கும் மிகுந்த வருத்தம். ஒருநாள் திடீரென ஒரு யோசனையோடு, பூ, பழம், பத்தி, சூடத்தோடு கடல்தாயை வேண்டிக் கொண்டார்.

‘எங்களுக்கு வாழ்வு சாவு எல்லாமே ஓம் மடியிலதான். எங்களுக்கு அள்ளிக் குடுக்குறவ நீதான். நீ குடுக்காத செல்வம் எதுவும் எங்களுக்கு வேற எங்கேருந்தும் வந்துடாது. நாட்டாருக்கு ஒத்த வாரிசான்னு நாலுசனம் பழிச்சிப் பேசணுமா? நீ உண்மையானவளா இருந்தா என்னக்கிம் எங்களக் கைவிடாத தாயாருந்தா யாம் பொண்டாட்டி வயத்துல ஆணோ, பொண்யோ ஒரு புள்ளக் குடு”15 என்று தன் மனதில் உள்ள மனக்குறையைக் கடல்தாயிடம் சொல்லி அழுது கடலில் கணவன் மனைவி இருவரும் மூழ்கி எழுந்தனர். நாட்டாரின் மனைவி கருவுற்றுப் பெண் பிள்ளை பிறந்தது. அந்தப் பெண் பிள்ளைக்கு கடல்தாயின் பெயராகிய சமுத்திரவல்லி என்றே பெயரும் சூட்டினார் நாட்டார் என்பதன்வழி ஆறுகாட்டுத்துறைக் கடலை நாட்டாரும் கடவுள்நிலைக்குக் கொண்டு சென்று வணங்குவதையும் அதனைத் தன் மகளாக உறவாக்கிக் கொண்டதையும் காண முடிகின்றது.

## மீன்பிடித் தொழிலாளர் எதிர்கொள்ளும் சவால்கள்

இயற்கை மீது மனிதன் தான் செயலாற்றுகின்ற ஒவ்வொரு செயலுக்கும் அதற்கு இணையான எதிர்செயல்பாடு இயற்கையிடமிருந்து மனிதன் பெறுகிறான். ஆகையால்தான், ஆறுகாட்டுத்துறை மக்கள் இயற்கையான கடல்தாயைப் போற்றி வணங்கி வந்தனர். ஆனாலும் கூட கடல்தாய் இயற்கைச் சீற்றங்களைச் சிலநேரங்களில் வெளிப்படுத்துவதைக் காண முடிகின்றது. பொதுவாக, அமாவாசை, பௌர்ணமி போன்ற காலங்களில் கடல் சீற்றத்தின் அளவு அதிகரித்துக் காணப்படும். அத்தகைய காலங்களில்தான் மீனவர்கள் இடர்ப்பாடுகளைச் சந்திக்க நேரிடுகிறது. அத்தகையதொரு நிகழ்வை,

‘மெல்ல மெல்ல எழுந்த காற்று கடலின் மேற்பரப்பை தட்டித் தட்டி கோவம் கொள்ள வைத்தது. தாழ்ந்து கிடந்த கடல் வேகம் கொள்ள ஆரம்பித்தது. குறுக்கு மரங்களில் உட்கார்ந்திருந்த நால்வரும் மிதப்புகள் சகிதமாய் உள் இறங்கி உட்கார்ந்து கொண்டார்கள். பதிய வைத்த மரக்கணம் ஒரேயிடத்தில் நின்றபடி உயர்ந்தும் தாழ்ந்தும் நாட்டியமாடியது”

ஊ..... ஊ..... என்ற பேரிரைச்சலுடன் சுழன்றடித்தது காற்று. காற்றின் போக்கையும் வேகத்தையும் கண்டிக்கும் விதமாய் உய்ந்தெழுந்தன அலைகள். ஆழ்கடலும் புரண்டு எழுந்து மேலே வந்துத் தாண்டவமாடியது

மரம் ஆடிய ஆட்டத்தில் குடல் குலுங்கி, வயிறு கலங்கி மயக்கம் வந்தது சேகருக்கு. வொவ்வொவ் என்று வாந்தி எடுக்க ஆரம்பித்தான். உண்டிருந்த கஞ்சிச் சோறும், அவித்த மீனும் வெளிவந்தது”16 என்பதன் மூலம் மரக்கணத்தில் இருந்தவர்கள் மரணப் பயத்துடன் இருந்தார்கள் என்பதும், கடலில் புயல் ஏற்பட்டு மரக்கணம் கவிழும்நிலையில் இருப்பதையும் அறிய முடிகிறது.

மரக்கலத்தில் சென்ற நான்குபேரில் சுப்பு மட்டும் இதுபோன்ற பல இடர்களைச் சந்தித்தவர் ஆதலால் அச்சம் கொள்ளாமல் இருந்தார். மற்ற மூவரும் மரக்கலத்திற்குப் பழக்கப்பட்டவர்களாக இருந்தாலும் இதுபோன்ற கடல் சீற்றத்தைக் கண்டவரில்லை என்பதால் அஞ்சினர்.

சவரிமுத்து மீன்பிடித்தலில் திறமை வாய்ந்தவனைப் போல் கடலில் மூழ்குவதிலும் திறமை வாய்ந்தவன். கடலில் வலை சிக்கிக் கொண்டால் அந்தச் சிக்கலை எடுத்துவிடுவதில் திறமையானவன். அதனால்தான், ஒருமுறை கோடியக்கரை விசைப்படகுகாரரின் வலையைச் சிக்கலில் இருந்து எடுக்க முயற்சித்து நடுக்கடலில் குதித்து வலையை மீட்டெடுத்தான். அப்பொழுது எதிர்பாராத விதமாக அந்த

## உடைந்த கப்பலுக்குள் வேளா மீன் இருந்து அவனைத் தாக்கியது.

உடம்பைச் சுழற்றி மேலே வர எத்தனித்த அந்தக் கணத்தில் கருப்புக்குள்ளிலிருந்து சரேலென்று பாய்ந்தது அதந் பெரிய வேளா. அதன் முன் பகுதியில் முன்நோக்கி நீண்டிருந்த கத்தி போன்ற முள் சவரிமுத்துவின் நெஞ்சில் குத்தி உடம்பைக் கிழித்தது. நெஞ்சு பிளந்து ரத்தம் கடலைச் செந்நிறமாக்கியது. வேளாவின் விசிறலில் சவரிமுத்து பின்னலெடுத்து விட்ட மடிக்குள் போய் விழுந்தான். அவன் உயிர் அப்போதே அந்த ஆழ்கடலுக்குள் அடங்கி விட்டது”17 என்பதன்வழி நடுக்கடலில் மீன்பிடிக்கும்போது மடிவலை கடலில் ஏதேனும் கப்பலின் சிதைந்த பாகங்களில் மாட்டிக் கொள்வதுண்டு. அதனை சரிசெய்வதற்கு கடலுக்குள் இறங்கும்போது வேளா மீன் போன்ற கடல் உயிரினங்கள் தாக்கி மனிதன் இறப்பதும் உண்டு என்பதை கடலில் செல்பவர்கள் எதிர்கொள்ளும் எதிர்பாராத இடர்பாடுகளாக அறிய முடிகின்றன.

கட்டுமரம், மரக்காணம், வலை ஆகிய மூன்றுமே மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு இன்றியமையாதது. சாமுவேல், சமுத்திரவல்லியைத் திருமணம் செய்து கொண்ட பிறகு சுப்புவோடு மீன்பிடித் தொழிலுக்குச் செல்வதைத் தவிர்த்தான். தானே, தனியாகவே தொழிலுக்குப் போய் வந்தான். தனியாகச் செல்வதால் அவனுக்குப் பாடும் சுமாராகவே வந்தது. அதனால், வருமானமும் குறைவாகவே கிடைத்தது. தன் தம்பி படிப்பு, இதர செலவு என சாமுவேல் மிகச் சிரமப்பட்டான். ‘சாமுவேல் தான்மட்டும் கட்டுமரத்தில் கடலுக்குப் போய் வந்தான். தனியாளாய் வலை போடுவதால் பாடும் சுமாராய்த்தான் இருந்தது. வருமானம் சொற்பம்தான். அதைக்கொண்டு தம்பிக்குப் பணம் அனுப்பவும் வீட்டு, சாப்பாட்டுச் செலவுக்கும் கொஞ்சம் சிரமப்படவே செய்தான்”18 என்பதன் மூலம் மீன்பிடித் தொழிலுக்கு வேகம், விவேகம் என இருந்தாலும் தனித்த ஆளாக நின்று இத்தொழிலில் வெற்றி பெறுவது சுலபமல்ல. மீன்பிடித் தொழிலானது ஒன்றுக்கு மேற்பட்டவர்களால்

மேற்கொள்ளப்படும் கூட்டு முயற்சியாகவே இருப்பதை இதன்மூலம் உணர முடிகின்றது.

## மீன், கருவாடு விற்றல்

கடல் சார்ந்து வாழும் மக்கள் மீன்பிடித்தலிலும் அதனை விற்றலிலும் ஈடுபடுவது இயல்பேயாகும். பண்டைக் காலத்திலிருந்து மீன்பிடித்தலில் ஆணும் மீன் விற்றலில் பெண்ணும் ஈடுபடுகின்றனர் 'மீனவர்களில் கணவன் மனைவியாகிய இருவருமே உழைத்துண்பர். கணவனையும் மக்களையும் மனைவியையும் போற்றிக் காப்பதோடு தாமும் உழைத்துப் பொருள் திரட்டி வாழ்வதிலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பர் பரதவக்குடி மகளிர். இன்றும் பிடித்து வரும் மீனை மீனவப் பெண்டிர் தலைச் சுமையாகத் தூக்கிச் சென்று அங்காடியில் விற்றுவருவது பெருவழக்கமாயுள்ளது"[19] என்று குறிப்பிடுகிறார் தி.முத்துக்கண்ணப்பன். பண்டைக் காலத்திலிருந்து பெண்கள் மீன் விற்பது வழக்கமாயிருக்கிறது. மீனோடு கருவாடு விற்பதையும் வழக்கத்தில் கொண்டுள்ளனர்.

மீன்களை வெயிலில் உலர வைத்து கருவாடாக்கி விற்பதில் பெரும்பாலும் பெண்கள்தான் ஈடுபடுகின்றனர். ஆறுகாட்டுத்துறையின் கருஞ்சேறு கலந்த நிலப்பகுதியில் சின்ன சின்னக் கொட்டகைகள் காணப்படும். அங்கெல்லாம் கருவாடு காயவைக்கும் பெண்கள் தம் தொழிலில் ஈடுபடுவர். 'கடற்கரைக்கும் ஊறுக்கும் இடையே தெற்கு வடக்காய் நீண்டு கிடந்தது ஒட்டமான அப்பகுதி. கடற்கரை மணலுடன் கருஞ்சேறு கலந்த நிலப்பகுதி. கடல் கொந்தளிப்பால் கடற்கரையில் கடல்நீர் ஏறுவதற்குள் எங்கிருந்தோ இப்பகுதிக்கு தண்ணீர் ஓடிவந்து விடும். கோடையில் உப்பின் பளபளப்பு மேல்மண்ணில் தெரியும். இப்பகுதியெங்கும் இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கருவாட்டுக் கொட்டகைகள் போடப்பட்டிருந்தன. சின்னச்சின்னதாய் இருக்கும் அவற்றை எண்ணிப் பார்த்தால் முந்நூறுக்குக் குறையாது. ஆறுகாட்டுத்துறைப் பெண்களின் தொழிற்கூடங்கள் இவை. அக்கா, தங்கை, நாத்தி, நங்கையென்று உறவுக்காரப் பெண்கள் இரண்டு மூன்று பேராய்ச் சேர்ந்து ஒரு கொட்டகையைப் போட்டுக் கொண்டிருந்தனர். கொட்டகைக்கு முன்புறமும் பின்புறமும் கருவாடு காயவைக்க ஏதுவாய் தரையைச் சமப்படுத்தி வைத்திருந்தனர்"[20] என்று கருவாடு காய வைப்பதற்கானப் பகுதி சித்திரிக்கப்படுகிறது. நாட்டாரின் மனைவி தனக்கென்று ஒரு கொட்டகையைப் போட்டு கருவாட்டுக்கான பண்படுத்தலில் ஈடுபட்டிருந்தாள்.

'வெட்டியெடுத்த பீலிகளைத் தனியாக ஓர் ஏனத்தில் போட்டுவிட்டு மீனைப் பிளந்து பக்கத்தில் கிடந்த பனை மட்டையில் போட்டாள். எல்லா மீன்களையும் பிளந்து போட்டபின் அவற்றிற்கு உப்பு வைத்துக் காயப் போடுவாள்.'[21]

'சிலரின் கொட்டகைக்கு முன் கருவாடு காய்ந்து கொண்டிருந்தது. பச்சை ரத்தத்துடன் கிடக்கும் புதிதாய்ப் போட்ட கருவாடு, பாதிக் காய்ந்தும் காயாததுமான ஊறல் கருவாடு, நான்கு நாட்களுக்கு முந்தைய கருவாடு என தனித்தனியாய் வகைவகையாகப் பிரித்துக் காய வைக்கப்பட்டிருந்து. அப்பகுதி முழுவதுமே கருவாட்டு வாசம் வீசிக் கொண்டிருந்தது.

நாட்டார் பொண்டாட்டி பூங்காவனம் தனக்கென்று தனியாய் ஒரு கருவாட்டுக் கொட்டகையைப் போட்டிருந்தாள். இரண்டு பெரிய அடைப்புகள் கொட்டகைக்கு முன் போடப்பட்டிருந்தன. கீந்து போட்;ட மீன்களும் சிறுபொடிக் கருவாடுகளும் தனித்தனியாகக் காய்ந்து கொண்டிருந்தன"43 என்ற கூற்றின்வழி மீன் கருவாடாக மாற்றம்பெறும் நிலை விவரிக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

## பண்டமாற்றாக மீன்விற்றல்

பெரிய பெரிய நிறுவனங்கள் ஏலம் எடுத்தது போக எஞ்சிய மீன்களை அன்னக்கூடையில் வைத்து மீன் வியாபாரம் செய்யும் பெண்கள் ஏலம் எடுத்துச் செல்வர். சமுத்திரவல்லியும் அன்னக்கூடைகளில் மீன்களை வாங்கிச் சென்று விற்பனை செய்து தன் குடும்பத்தை நடத்தி வந்தாள்.

'சமுத்திரவல்லி, தான் ஏலம் எடுத்த மீனை அள்ளி அன்னக்கூடைக்குள் போட்டுக்கொண்டு ஓடினாள். அவள் வழக்கமாய் போகும் தேத்தாக்குடி செம்போடை நோக்கி நடந்தாள். ஊருக்குள் நுழைந்ததும் கூவத் தொடங்கினாள்.

'மீனோ..... மீனு....." சமுத்திரவல்லியின் குரல் தேத்தாங்குடி எங்கும் எதிரொலித்தது.

காசுக்கென்று மட்டுமல்லாமல் தேங்காய், மாங்காய், தானியங்கள் இவற்றிற்காகவும் பண்டமாற்றாய் மீன் கொடுத்துக் கொண்டிருந்தாள் சமுத்திரவல்லி"22 என்பதன்வழி சமுத்திரவல்லி தன் குடும்பப் பொறுப்பை உணர்ந்து அக்கம்பக்கத்து ஊர்களுக்குச் சென்று காசுக்காக மீன் விற்பதைப் போன்றே தேங்காய், மாங்காய், தானியங்கள் போன்றவற்றிற்காகவும் மீன்களை விற்க ஆரம்பித்தாள் சமுத்திரவல்லி என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

கணவனைப் பிரிந்து வாழும் பெண்கள் இல்லறக் கடமைகளை ஆற்றுவதற்கு பயந்து வாழ்வதைத் தவிர்த்து, தன் குடும்பப் பொறுப்பைத் தான்தான் செய்ய வேண்டும் என்றும், எத்தனை நாள்களுக்குத் தான் தன் தந்தையும் உற்றார் உறவினர் நமக்கு உதவுவர் என்பதை உணர்ந்துகொண்ட சமுத்திரவல்லி காற்றில் சிக்கிய மரக்கணம் காற்றை எதிர்த்துப் போராடிக் கரை சேர்வதைப் போன்று, தனக்கு வரும் துன்பங்களை எல்லாம் துச்சமென எண்ணாது அதனோடு எதிர்த்துப் போராடி வாழ்க்கையை வாழ்ந்து காட்டும்

மனஉறுதி மிகுந்த பெண்ணாகச் சமுத்திரவல்லி காணப்படுவதைக் காண முடிகின்றது.

## தொகுப்புரை

1.தொடக்ககால மனிதர்கள் வேட்டையில் ஈடுபட்டு உணவைத் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டனர். கால மாற்றமும், மனிதனின் அறிவு வளர்ச்சியும் புதிய தொழில் கருவிகளைக் கண்டுபிடிக்கத் துணை செய்து. மனிதனின் உடல் உழைப்பைக் குறைத்து, உற்பத்தியைப் பெருக்கியது என்பது புலனாகிறது.

2.கடலும் கடல்சார்ந்த பகுதியான நெய்தல் நிலத்தில் வாழும் பரதவர் இனமக்கள் மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல், முத்துக் குளித்தல் ஆகியவற்றை முதன்மைத் தொழிலாகச் செய்து வந்தனர். தற்காலத்தில் கடல்கரைப் பரப்பில் வாழும் மக்கள் மீன்பிடித்தலையும் மீன் விற்றலையும் தொழிலாகச் செய்து வருகின்றனர்.

3.மாணிக்கம் நாவல் ஆற்று மீன் பிடித்தல், கடலில் மீன்பிடித்தல் என இரண்டு நிலைகளில் மீன்பிடித் தொழில் நடைபெறுவதைக் காட்டுகிறது. மழைக்காலங்களில் கானாறு போன்ற கடல்ஓரப் பகுதியில் மீன்பிடிப்பதும், மற்ற நாள்களில் நடுக்கடல் வரை சென்று மீன்பிடிப்பதையும் மாணிக்கம் நாவல் எடுத்துக்காட்டுகிறது.

4.மீன்பிடித் தடைக் காலங்களில்; மீன்பிடிப்பதும், கடலுக்குச் சென்று மீன்பிடிக்க இயலாத வயதானவர்கள் மீன்பிடிப்பதற்கும் கானலாறு இருந்ததை ஆறுகாட்டுத்துறை நாவலில் காண முடிகின்றது.

5.ஆறுகாட்டுத்துறையில் கடலில் இருந்து ஆண்கள் பிடித்து வரும் மீன்களைப் பெண்கள் தரம் பிரிப்பதும், அதனை விற்பதுமான பணியைச் செய்கின்றனர். விற்றதுபோக எஞ்சியதை கருவாடாக மாற்றுவதும் பெண்களின் தொழிலாக இருப்பதால் ஆணுக்கு நிகராத் தொழில் செய்யும் ஆற்றல் உடையவர்களாகப் பெண்கள் இருப்பதை அறிய முடிகின்றது.

## முடிவுரை

ஒரு தொழில் செய்கிறோமென்றால் அத்தொழில் செய்கின்றபோது ஏற்படும் பேரிடர் காலங்களில் தொழிலாளர்களைப் பாதுகாத்துக்கொள்ள தொழில் பாதுகாப்பு வேண்டும். ஆனால், மனிதர்கள் மேற்கொள்கின்ற பெரும்பான்மையான தொழிலில் அத்தகைய பாதுகாப்புத் தன்மை இருப்பதில்லை. மக்களும் அதற்கான முயற்சிகளைச் செய்துகொள்வதுமில்லை. பொதுவாக எந்தவிதத் தொழில் அமைப்புகளையும் சாராமல் வேலை செய்யும்

தொழிலாளர்கள் அதிகப்படியான இடர்ப்பாடுகளைச் சந்திக்கின்றனர் . கடல்புற மீன்பிடித் தொழிலாளர்களும், அதனை விற்பனை செய்யும் மீன் வியாபாரிகளும் தொழில்தளத்தில் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதை அறியமுடிகிறது.ஆற்று மீன் பிடித்தல், கடலில் மீன்பிடித்தல் என இரண்டு நிலைகளில் மீன்பிடித் தொழில் நடைபெறுவதைக் காட்டுகிறது. ஒரே இனத்தினராக இருந்தாலும்கூட மீன்பிடித் தொழில் செய்யும் மக்களிடம் திருமண உறவுகள் வைத்துக் கொள்வதில்லை என்பதை அறிய முடிகிறது. மீன்பிடித் தொழில் செய்வதென்பது எளிதான வேலை கிடையாது. காற்று, புயல், மழை என எதனையும் தாங்கும் உள்ள வலிமையும் உடல் வலிமையும் பெற்றவர்களால் மட்டுமே இத்தொழிலைச் செம்மையுறச் செய்ய முடியும். எதிர்க்காற்றுடன் போராடி கலத்தில் நின்று போராடினால்தான் மீன்பிடித்தலைச் செய்ய முடியும். மீன்பிடித் தொழில் செய்யும் மீனவ மக்களை ஒரே சாதியினருக்குள் புறந்தள்ளி வைக்கும் வழக்கம் உள்ளதையும் அறியமுடிகிறது. மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் மீனவர்கள் மரபினால் போதுமான பொருளாதாரத்தை ஈட்ட முடியாமலும், பொருளாதார வசதி இன்மையால், புதுமையான தொழில் கருவிகளை எட்ட முடியாமல்; தடுமாற்றம் கொண்டு வாழும் நிலைக் குறித்தும் ஆராயப்பட்டுள்ளன.

## குறிப்புகள்

1.சு.தமிழ்ச்செல்வி, ஆறுகாட்டுத்துறை, நியூ சென்சுரி புக் ஹவுஸ், 2013, ப.49

2.அ.கா.பெருமாள் (தொ.ஆ), கானலம் பெருந்துறை, தமிழனி, 2005, ப.25

3.சி.பத்மநாதன் (ப.ஆ), சங்க இலக்கியமும் சமூகமும், யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட் லிமிடெட்), 2007, ப.152)

4.சு.தமிழ்ச்செல்வி, மாணிக்கம், நியூ சென்சுரி புக் ஹவுஸ், ப.221

5.மேலது, ப.221

6.மேலது, ப.7

7.மேலது, ப.3

8.மேலது, ப.9

9.மேலது, பக்.16-17

10.மேலது, பக்.26-27

11.சு.தமிழ்ச்செல்வி, ஆறுகாட்டுத்துறை, நியூ சென்சுரி புக் ஹவுஸ், 2013, ப.48

12.மேலது, ப.55

13.மேலது, ப.71

14.சு.தமிழ்ச்செல்வி, ஆறுகாட்டுத்துறை, நியூ சென்சுரி புக் ஹவுஸ், 2013, ப.7

15.சு.தமிழ்ச்செல்வி, ஆறுகாட்டுத்துறை, நியூ சென்சுரி புக் ஹவுஸ், 2013, ப.11

16.மேலது, ப.19

17.மேலது, ப.162

18.தி.முத்துக்கண்ணப்பன், சங்க இலக்கியத்தில் நெய்தல், அதிபத்தர் பதிப்பகம், ப.205

19.சு.தமிழ்ச்செல்வி, ஆறுகாட்டுத்துறை, நியூ சென்சுரி புக் ஹவுஸ், 2013, ப.60

20.மேலது, ப.61

21.மேலது, பக்.60-61

22.மேலது, பக்.211